





__வள்ளியம்மாள் கல்வி ஊக்குவிப்பு நிதியம்__

*தோற்றத்திற்கான காரணம்:*

இந் நிதியத்தின் ஸ்தாபகரான நான் சிறிய வயதில் கல்விக்காக கஸ்டப்பட்ட விடயங்களை நினைவில் கொண்டும் என்னுடைய பெற்றோரான திரு.திருமதி நடராஜா வள்ளியம்மாள் அவர்களின் தியாகத்தாலும் அர்ப்பணிப்பாலும் என்னை இந்த நிலைக்கு (சமூகத்தில் நல்லஅந்தஸ்து உள்ளவராக)இனங்காட்ட வழி வகுத்தமையை மனங்கொண்டும் இப் பணியை 2000ம் ஆண்டு ஆரம்பித்தேன்.

எனது ஊரான ஆதிகோவிலடியில் அந் நாட்களிலும் சரி இந் நாட்களிலும் சரி 13,14 வயதுஆண்பிள்ளைகள் கடற்றொழிலுக்குச் சென்று தந்தையாருக்கு ஈடாக பணம் உழைக்கும் நாட்களாகவே இருந்து வருகின்றன.இந் நிலையில் எந்தவொரு தாய் தந்தையரும் அந்த உழைப்பை விட்டுக் கொடுக்கும் தியாகமனப்பாங்கில் இருக்க முடியாமை **யதார்த்தமே**.ஆனால் என்னுடைய அன்னை வள்ளியம்மாள் அவர்களின் தியாகமனப்பாங்கால் எங்களைஅதாவது மூத்தஅண்ணா குணரட்ணம் அவர்களை தவிர ஏனையோரை எப்பாடுபட்டாவதுகல்வியில் ஊக்குவிக்கவேண்டும் என்றுகங்கணம் கட்டியிருந்தார்.

அதன் பலனாக நானும் என்னுடைய தம்பி அரியரட்ணம் அவர்களும் ஓரளவுக்குகல்வியில் நாட்டம் காட்டிவந்தோம்.அதன் பயனாக என்னுடைய தம்பி திரு.ந.அரியரட்ணம் அவர்கள் கல்வித்துறையில் பட்டதாரியாகி அதிபர் பதவிகளை

வகித்து இறுதியில் கோட்டக்கல்விஅதிகாரியாக பணியாற்றி ஓய்வு பெற்றார்.அத்துடன் என்னுடைய இளைய தம்பியான யோகரட்ணத்தையும் நான் இலங்கை வங்கி மாத்தளை கிளையில் வேலை செய்யும் போது (1972ல்) அங்கு கொண்டு சென்று மிக பிரசித்தி பெற்ற St.Thomas college G.C.E (O/L) வரை படிக்க வைத்தேன்.

ஆனால் எனது பாதையோ வங்கித்துறைக்குள் சென்றுவிட்டது.இதனால் க.பொ.தசாதாரணபரீட்சையில் மட்டும் சித்தி பெற்ற நான் இலங்கை வங்கியில் காசாளாராக இணைந்து (1970)படிப்படியாகவங்கித்துறையில் பலசாதனைகளையும் பட்டங்களையும் பெற்று இறுதியில் 2010ம் ஆண்டில் இலங்கைவங்கியின் வடமாகாணத்திற்குரிய (5 மாவட்டங்களைக் கொண்ட )பகுதிக்குபொறுப்பாக இருந்து ஓய்வு பெற்றேன்.

நான் சிறிய பராயத்தில் கல்விக்காக பட்ட கஸ்டங்களும் ஏனையோரது ஊக்குவிப்பின்மையும்மும் என்னை உளமார்ந்த ரீதியாக சிந்திக்க வைத்தன.இதனால் என்னுடைய அன்னையின் பெயரில் ஒரு கல்வி நிதியத்தை உண்டாக்கி கல்வி கற்கும் சிறார்களை ஊக்கப்படுத்த வேண்டும் எனும் எண்ணம் எனது ஆழ் மனதில் தோன்றியது.இவ் விடயத்தை என்னுடைய சக ஊழியரான கலைப் பேரரசு அமரர் பொன்னுத்துரை பாலகுமாரன் (குரும்ப சிட்டி)அவர்களின் ஆற்றுப்படுத்தலில் இப்படியான ஒரு நிதியை உருவாக்கி கல்வியாளர்களை ஊக்குவிக்கும் நோக்கமாக இந் நிகழ்ச்சித்திட்டம் நடைபெற்றுவருகின்றது.

இந் நிகழ்ச்சிகளுக்காக வருடந்தோறும் நான் பல்லாயிரக்கணக்கான ரூபாவை செலவழித்த போதும் சாதனை மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வில் பங்குபற்றும் பெற்றோர்களின் எண்ணிக்கைமிகமிககுறைவானதாகவேகாணப்பட்டுவந்தது.

இதனால் எங்களுடைய நடவடிக்கைகளையும் வீண்விரயங்களையும் தவிர்ப்பதற்காக மந்த கெதியில் நடாத்தி வருகின்றோம்.ஆண்டு 5 புலமைப்பரீட்சையில் சித்தியெய்திய மாணவர்களை பத்திரிகை வாயிலாக கௌரவிப்பதிலும் 2011/2012 ……வரையான சகல தரத்திலுமான சாதனை மாணவர்களை கௌரவிப்பதிலும் நாம் கவனம் செலுத்திவருகின்றோம்.

இதற்கான சில ஆவணப்பதிவுகளை இக் கட்டுரையின் கீழ் காணலாம்.

ந.சிவரட்ணம்(Banker)

குடும்பத்தினர் சார்பாக

கீழே காணப்படும் மாதிரி சான்றிதழானது வள்ளியம்மாள் ஊக்குவிப்பு நிதியத்தினால் மாணவர்களை கௌரவப்படுத்துவதற்காக உருவாக்கப்பட்டதாகும்.



எமது அமைப்பின் தோற்றத்திற்கு அத்திவாரமாகவும் எமது மண்ணிற்கு பெருமை சேர்த்து சாதனை படைத்த மாணவனின்



# பாராட்டி வாழ்த்துகின்றோம்

## செல்வன் புஸ்பராசா சிவரூபன்

(யா/வல்வை சிவகுரு வித்தியாசாலை மாணவன்)

2000 ஆம் ஆண்டின் 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் யாழ். மாவட்டத்திலேயே அதிகூடிய புள்ளிகள் (182 புள்ளிகள்) பெற்று முதலாம் இடத்தைத் தட்டிக் கொண்டு யா/வல்வை சிவகுரு வித்தியாசாலைக்கும் பெற்றோருக்கும் எமது ஊராகிய ஆதிகோயிலடிக்கும் பெருமை தேடித் தந்ததையிட்டு அவரை மனமார வாழ்த்துகின்றோம்.

* ஆதிகோயில் பரிபாலனசபை, * ஆதிசக்தி கடற்றொழிலாளர் சங்கம்
* ஆதிசக்தி விளையாட்டுக்கழகம், * ஆதிசக்தி படிப்பகம்,
* ஆதிசக்தி சிக்கன கடன்வழங்கு கூட்டுறவுச் சங்கம்.

உதயன் 02.11.2000

வல்வெட்டித்துறை.

(80097)

அன்புச் செல்வமான மாணவமணி.
புஸ்ப்பராசா - சிவரூபனே!

கலைச் செல்வமெனும் ஏணிப்படியிலே
இது போன்று பல சாதனைகள் படைத்து
வாழ்வில் வளமுடன் வாழ்ந்து பெற்-
றோருக்கும், கல்விநிலையங்களுக்கும்
பிறந்த மண்ணிற்கும் பெருமைகள் பல
தேடித் தர ஒரு அப்பா ஸ்தானத்தில்
இருந்து வாழ்த்தும்

ந. சிவரத்தினம் (குடும்பம்)
முருகையன் கோவிலடி
வல்வெட்டித்துறை
02 - 11 - 2000

# பொற்கிளி வழங்கல்

## நடராசா வள்ளியம்மாள்
## கல்வி ஊக்குவிப்பு நிதியம்

வல்வை ஆதி கோவிலடி சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கத்தில்

உள்ள மேற்படி நிதியத்தால் ரூ 5000/-

***செல்வன் புஸ்பராசா சிவரூபன்*** அவர்கட்கு

2000 ஆம் ஆண்டு நடைபெற்ற 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் 182 புள்ளிகளைப் பெற்று யாழ் மாவட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றமையை பாராட்டி 14–01–2001 ல் யா/வல்வை சிவகுரு வித்தியாசாலையில் ஆதி கோவிலடி மக்களால் நடாத்தப்பட்ட பாராட்டு விழாவில் வழங்கப்பட்டதன் நினைவாக

| ..................... | ..................... | ..................... |
|---|---|---|
| விழாத் தலைவர் | பிரதம விருந்தினர் | ஊக்குவிப்பு நிதியகாரர் |
| (திரு.தி.இராமச்சந்திரன்) | (திரு.த.தவேந்திரராசா) | (திரு.ந.சிவரத்தினம்) |
| | (பாடசாலை அதிபர்) | |